Ministry of
Labour and
Foreign Employment

NIOSH
National Institute of
Occupational Safety and
Health • Sri Lanka

# ஆண்டறிக்கை

# වාර්ෂික වාර්තාව

# Annual Report

# 2022




தசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**ජාතික වෘත්තීය සුරක්ෂිතතා හා සෞඛ්‍යය ආයතනය**

**National Institute of Occupational Safety & Health**

# ஆண்டறிக்கை
# 2022

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும்
சுகாதார நிறுவகம்

# ஆண்டறிக்கை - 2022

தொகுப்பு :
சம்பிக்க அமரசிங்க, மொஹான் பெரேரா, சந்துலி சுமனதேவ
வடிவமைப்பு - துசித்த பெரேரா

வெளியீடு :
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வெளியீட்டுக் குழு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
இல.97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05, இலங்கை
தொலைபேசி +94 11 2 585 425

முழுப் பதிப்புரிமையுடையது.
2022

**ISBN - 978-624-6017-03-3**



2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் இணைந்த நிறுவனமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தாபிக்கப்பட்டது. சுய நிதியீட்டல் நிறுவனமாக இயங்கி வருகின்ற எமது நிறுவகத்தின் முதன்மைக் குறிக்கோள் சர்வதேச மட்டத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதாகும்.

ஆரம்பத்திலிருந்து கருத்தரங்குகளை நடத்துதல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் பொதுமக்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழிலாளர்களுக்கு புதிய அறிவினை வழங்குவதற்கும் அவர்களின் அறிவினை அவர்களுக்கு மத்தியில் பரிமாறிக் கொள்வதற்கும் தேவையான பின்னணி எம்மால் உருவாக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. பணியிடச் சூழலை பேணி வருவது தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுதல், பாதுகாப்பான பண-ியிடச் சூழலை உருவாக்குதல் மற்றும் சரியான முறையில் பேணி வருவதற்குத் தேவையான அறிவினை தொடர்ந்தும் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் செயலாற்றுகி-ன்றோம்.

நாம் நிதமும் எமது வாடிக்கையாளர்களுக்கு மதிப்பளித்து பக்கச் சார்பற்ற வகையில் தொழில்நுட்ப சேவைகளை வழங்குகின்றோம். தொழில்சார் விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான அறிவினை அவர்களுக்கு வழங்குவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தேவைப்படும் பயிற்சியினை வழங்குவதற்கும் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புப் பூண்டுள்ளோம். நாம் வழங்குகின்ற பயிற்சியின் ஊடாக சேவை நிலையத்தில் காணப்படுகின்ற ஆபத்துக்களை இனங்கண்டு அதன் பொருட்டுத் தேவையான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு இயலுமை உள்ளது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பணியாற்றுகின்ற ஒரேயொரு அரச நிறுவனம் எமது நிறுவனம் என்பதால் இலங்கை மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கு நாம் நிதமும் பணியாற்றுகின்றோம்.

டாக்டர் என். சீ. அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

# பொருளடக்கம்


தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவத்தின் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி V

**முதலாம் அத்தியாயம் (தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்)**

1.1 அறிமுகம் 2

1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் 3 - 4

1.3 விசேட முன்னுரிமைகள் 5

1.4 நிறுவகத்தின் பதவியணியின்அமைப்பு 5

**இரண்டாம் அத்தியாயம்(நிறுவகத்தின் பிரதான பணிகள்)**

2.1 சேவைகளை வழங்குதல் 8 – 13

2.1.1 வழமையான செயற்பாடுகள் 8

அ. சூழலியல் அளவீட்டு ஆய்வுகள் 8

ஆ. இடர் மதிப்பீடுகள் 8

இ. மருத்துவப் பரிசோதனைகள 9

2.1.2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் 9

ஆ. விசேட பயிற்சிகள் 9

முதலாம் மட்டம் 10

இரண்டாம் மட்டம 11

மூன்றாம் மட்டம் 12

ஆ. கருத்திட்டங்கள 12

இ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விருது வழங்கும் விழாவை ஒழுங்கு செய்தல் 12

ஈ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கினை ஒழுங்கு செய்தல்

ஊ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களு-க்கான தேசிய சங்கத்தைத் தாபித்தல் 13

எ. நலனோம்பல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் 13

2.1.3 சர்வதேச ஒத்துழைப்பு 13

2.2 சேவை வசதிகளை மேம்படுத்துதல் 14

2.2.1 நிறுவனத்தின் தரத்தினை மேம்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல் 14

**மூன்றாம் அத்தியாயம் (நிறுவகத்தின் முன்னேற்றம்)**

## அட்டவணைகளின் பட்டியல்

**அட்டவணை 1.1 நிறுவகத்தின் பதவியணியின் அமைப்பு**

**அட்டவணை 3.1 சுற்றாடல் அளவீட்டு ஆய்வுகள்**

**அட்டவணை 3.2 விசேட நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்** 17

# முதலாம் அத்தியாயம்

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

## 1.1 அறிமுகம்

இலங்கையில் ஆரோக்கியமான தொழில்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஆரோக்கியமான சுகாதார வழக்கங்களையும் பின்பற்றி பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான தொழிற்படையை உருவாக்கும் நோக்கத்துடன் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் இணைந்த நிறுவனமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தாபிக்கப்பட்டது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தின் போது அதற்கான பிரதான பங்களிப்பினை அந்நாட்டில் வாழும் உழைப்பாளர் படையே வழங்குகின்றது என்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை. அவர்களின் ஊடாக நிலைபெறான அபிவிருத்தியை அடைய வேண்டுமாயின் அவர்களது பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் என்பன உயர் மட்டத்தில் காணப்பட வேண்டியது இன்றியமையாத ஒரு விடயமாகும். இலங்கையில் மிகவும் பொறுப்பான பணியினை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற ஒரேயொரு அரச நிறுவனம் என்ற வகையில் எமது நிறுவனம் தேசியப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இதன் போது நாம் தினசரி மேற்கொள்ளும் நாளாந்தப் பணிகள் மற்றும் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக இலங்கையின் உழைப்பாளர் படையின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம்.

நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் அளவீட்டு ஆய்வுகள், இடர் மதிப்பீடுகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் மூலம் மட்டுமன்றி விசேட நிகழ்ச்சித் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயிற்சிகள், கருத்திட்டங்கள் மூலமும் ஏனைய நாடுகளுடன் சர்வதேச ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் ஊடாக இலங்கையில் பயனுள்ள உழைப்பாளர் படையை உருவாக்குவதற்கு நாம் பொறுப்புப் பார்த்துக் கொள்கின்றோம்.

அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடு என்ற வகையில் மொத்த தேசிய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற பாட்டாளி மக்களின் சேவைக்கான பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் என்பவற்றைப் பாதுகாத்து அபிவிருத்தியை நோக்கி வேகமாக பயணிப்பதற்குத் தேவையான தொழிற்படையை எமது நாட்டுக்கு கொடையளிப்பது எமது ஏக குறிக்கோளாகும். அப்பயணத்தின் போது எமது நிறுவனத்தின் ஆதரவினை தங்கு தடையின்றி வழங்குவதற்கு நாம் நிதமும் அர்ப்பணிப்புப் பூண்டுள்ளோம்.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

### தொலைநோக்கு

"அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல் "

---

### செயற்பணி

"வேலைத்தளத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்துவதற்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குமாக அனைத்து விதமானதொழில்சார்அபாயங்களையும் தடுப்பதன் பொருட்டு கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு பங்குதாரர்களை வலுப்படுத்துதல "

---

### நிறுவனத்தின் நோக்கங்கள

அ) தொழில் தருநர்களினதும் தொழிலாளர்களினதும் பாதுகாப்பு, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் தொழிலின் தன்மையைக் கவனத்திற்கொண்டு, இரு தரப்பினரினதும்பணியிடச் சூழல் தொடர்பில் தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(ஆ) வேலைத் தளங்களில் தொழில் சார்ந்ததாக ஏற்படும் திடீர் விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(இ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் புலனாய்வு கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றை நடத்துதல்,மேற்கொள்ளல் மற்றும் அவற்றிற்கு உதவுதல்

(ஈ) உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது பிறவேறு அபாயகரமான பொருட்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பாகயாதேனும்நிறுவனத்திற்கு அல்லது ஆளுக்கு ஆலோசனைச்சேவைகளை வழங்குதல்

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அமைந்துள்ள பிறவேறு நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது நிறுவனத்தினால் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவு மற்றும் பயிற்சியினைத் தேவைப்படுத்துகின்றபணியாளர்கள், இருப்பாளர்கள்,வேலையாளர்களுக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு அறிவூட்டுதல் மற்றும் தேவையான பயிற்சியை வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியினைப் பூர்த்தி செய்வதன் பேரில் சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமாக்களை வழங்குதல்

(ஊ) உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பாகவும் உளச் சமூக தீங்குகள் மற்றும் இனங்காணப்பட்ட அபாயங்களைத் தடுப்பது தொடர்பாகவும் தேவையான சேவைகளை வழங்குதல்

(எ) (ை) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் நியமங்கள், குறியீடுகள், பயன்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான சட்டவாக்க தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்

(ை) பணிகள் சரியாக இடம்பெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்தல் மற்றும் உரிய முறையில் இடம்பெறுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுவதற்காக ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.

(ஐ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள், செயலமர்வுகள், அல்லது ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணையளித்தல்

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் அமைச்சுக்களுக்கிடையிலான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஓ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் முன்னேற்றுவதற்காக நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களைத் தாபித்து பேணிவருதல்

(ஔ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை அபிவிருத்தி செய்தல்

(க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பிறவேறு தாபனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல்

(ங) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய தரநிய-மங்களை
உருவாக்குதல்.

## 1.3 விசேட முன்னுரிமைகள்

1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் பணியாற்றி சமகாலத் தேவைகளுக்கமைவாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. பணியாளர்களுக்கு பாதுகாப்பான சூழலில் ஆரோக்கியமாக சேவையில் ஈடுபடுவதற்குத் தேவையான பணியிடச் சூழலை வேலைத்தளத்தில் உருவாக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களின் அறிவினை விருத்தி செய்து, புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் பற்றிய புரிதலை வழங்கி தரத்தில் உயர்ந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு முறைகளை வேலைத்தளங்களில் பேணிச் செல்வதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

4. கால ரீதியாக வேலைத்தளங்களில் எழுகின்ற சுகாதார மற்றும் பாதுகாப்பு பற்றிய சிக்கல்களுக்கு தீர்வுகளைக் கண்டறிவதற்கு அயராது பணியாற்றுதல்.

## 1.4 நிறுவகத்தின் பதவியணியின் அமைப்பு

| சிரேஸ்ட நிலை | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | ஆங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | ஆங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | ஆங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | ஆங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | வெற்றிடங் களின் எண்ணிக்கை வீதம் |
| 07 | 02 | 03 | 03 | 10 | 06 | 05 | 05 | 25 | 16 | 36% |

# இரண்டாம் அத்தியாயம

## நிறுவகத்தின் பிரதான பணிகள்ய

# நிறுவகத்தின் பிரதான பணிகள்

நிறுவகத்தின் பிரதான பணிகள் தொடர்பாக ஆராயும்போது அது இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன, சேவைகளை வழங்குதல் மற்றும் சேவை வசதிகளை முன்னேற்றுதல் என்பனவாகும்.

## 2.1 சேவைகளை வழங்குதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவகத்தின் பிரதான பணி யாதெனில் சேவை பெறுநர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதாகும். அதன் போது அன்றாட நடவடிக்கைகள் மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமும்சர்வதேச ஒத்துழைப்பின் அடிப்படையிலும் சேவைகள் வழங்கப்படுகின்றன. அவை தனித்தனியாக உப தலைப்புகளின் கீழ் பின்வரும் வகையில் ஆராயப்பட்டுள்ளன.

### 2.1.1 வழமையான செயற்பாடுகள்

- சூழலியல் அளவீட்டு ஆய்வுகள்
- இடர் மதிப்பீடுகள்
- மருத்துவப் பரிசோதனைகள்

### அ. சூழலியல் அளவீட்டு ஆய்வுகள்

சேவை நிலையங்களின் பணிச்சூழல் தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான மட்டத்தில் காணப்படுகின்றதா என்பது சுற்றாடல் அளவீட்டு ஆய்வுகளின் மூலம் ஆராயப்படுகின்றன. வாயுவின் நிலைமையை ஆய்வு செய்தல், புகைப் பரிசோதனை, தொழில்துறையில் தூசு மட்டத்தை ஆய்வு செய்தல், இரைச்சல் மட்டத்தை அளவிடுதல் மற்றும் வெப்பத்தின் மட்டத்தை ஆய்வு செய்தல் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. பணிச்சூழல் பொருத்தமான மட்டத்தில் காணப்படுகின்றதா என்பதை உபகரணங்களைப் பயன்படுத்தி பரிசோதிப்பது இங்கு இடம்பெறுகின்றது. சுகாதாரப் பாதுகாப்புடன் சேவையில் ஈடுபடுவதற்குத் தேவையான சூழலை உருவாக்குவதன் பொருட்டு அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு அது தொடர்பாக தொடர்ச்சியான விழிப்பூட்டல்கள் உரிய நிறுவனத்திற்கு சென்றும் எமது நிறுவனத்திலும் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன.இநக

### ஆ. இடர் மதிப்பீடுகள்

சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற ஆபத்தான நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இடர்மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது பாதுகாப்பு அலுவலர்கள் உரிய நிறுவனத்திற்குச் சென்று அங்கு காணப்படுகின்ற ஆபத்தான நிலைமைகளை பரிசோதிக்கின்றனர். நிறுவனத்தைப் பரிசோதித்து அங்கு காணப்படுகின்ற ஆபத்தான நிலைமைகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விழிப்பூட்டல்களை மேற்கொள்வதோடு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குகின்றன

## இ. மருத்துவப் பரிசோதனைகள்

ஊழியர்களின் சுகாதார நிலைமையானது சேவையாற்றும் அளவிற்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்காக மருத்துவப் பரிசோ-தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது ஊழியர்களின் செவிப்புலன் அளவீட்டுப் பரிசோதனைகள், குருதிப் பகுப்பாய்வு, நுரையீரல்களின் செயல்பாடு, கண்பார்வை சம்பந்தமான பரிசோதனைகள் மற்றும் வேலை செய்வதற்கான உடலுறுதியை மதிப்பீடு செய்வதற்கான பரிசோதனைகள் எம்மால் மேற்கொள்ள-ப்படுகின்றன. இதில் மருத்துவர்களும் எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் பங்கேற்பதோடு ஊழியர்கள் சேவையில் ஈடுபடுவதற்குப் பொருத்தமாக உள்ளனரா என்பது தொடர்பாகவும் அவர்களுக்குள் காணப்படுகின்ற நோய் நிலைமைகள் யாவை என்பது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நிறுவனம் விழிப்பூட்டப்படுகின்றன. அத்தோடு அவர்களுக்குள் காணப்படுகின்ற நோய் நிலைமைகள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் யாவை என்பன தொடர்பிலும் இதன்போது அவர்கள் விழிப்பூட்டப்படுகின்றனர். நாம் தொடர்புடைய நிறுவனத்தி-ற்கு சென்றும் எமது நிறுவனத்திலும் இப்பரிசோதனைகளை மேற்கொள்கின்றோம்.

## 2.1.2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்


நாளாந்த சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக விசேட நிகழ்ச்சித் திட்டங்களை பேணி வருவது எமது நிறுவனம் வழங்குகின்ற ஒரு பிரதான சேவையாகும். அதன்போது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள், விருது வழங்கும் விழாக்களை நடத்துதல், கருத்தரங்குகளை நடத்துதல், துறை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல் என்பன எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. நிதமும் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்கு மேலதிகமாக நாட்டுக்கான சேவைகளை வழங்கும் முதன்மையான குறிக்கோளை முதலாகக் கொண்டு தொழில்துறையில் காணப்படுகின்ற தேவைகளை இனங்கண்டு இந்த விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு சில சந்தர்ப்பங்களில் நிறுவனங்களின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் எம்மால் நடைமுறைப்படுத்-தப்படுகின்றன.

## அ. விசேட பயிற்சிகள்

எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூன்று பிரதான மட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் போது,

- ☐ முதலாம் மட்டம்
- ☐ இரண்டாம் மட்டம்
- ☐ மூன்றாம் மட்டம்

என்ற வகையில் எமது நிறுவனத்தின் பயிற்சிப் பாடநெறிகளும் செயலமர்வுகளும் பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளன. அதன் போது தொழில்சார் பாதுகாப்புத் தொடர்பில் பயில்வதற்கு எதிர்பார்க்கும் ஆட்களுக்கு அவர்கள் பெற்றுள்ள கல்வி மட்டத்தின் பிரகாரமும் சேவை அனுபவத்தின் பிரகாரமும் இந்த பாடநெறிகளிலும் பயிற்சிக-ளிலும் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. தேசிய தொழில்சார் பா-துகாப்பு உயர் டிப்ளோமா பாடநெறி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி(ஏனு 05), தேசிய தொழில்சார் பாதுகாப்பு சான்றிதழ் பாடநெறி மற்றும் குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எம்மால் நடத்தப்படுகின்றன. அதற்க-ான பாடநெறிக் கட்டமைப்பு பின்வருமாறு அமைகின்றது.



පාඨමාලා සැලැස්ම

## ■ முதலாம் மட்டம்

எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற குறுகிய கால பயிற்சிச் செயலமர்வுகளாவை முதலாம் மட்டத்தில் உள்ளடங்குகின்ற விசேட பயிற்சிகளாக எடுத்துக்காட்ட முடியுக

- □ கட்டுமானத் துறைக்கான செயலமர்வுகள்
- □ கழிவுப்பொருள் முகாமைத்துவ பயிற்சிச்செயலமர்வுகள்
- □ தொழில்சார் பாதுகாப்பு பற்றிய விழிப்பூட்டல் செயலமர்வுகள்
- □ தாதியர்களுக்கான செயலமர்வுகள்
- □ சுகாதாரத்துறை ஊழியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு பற்றிய செயலமர்வுகள்
- □ அலுவலக ஊழியர்களுக்கான தொழில்சார்பாதுகாப்பு பற்றிய செயலமர்வுகள்
- □ ஆய்வுகூட ஊழியர்களுக்கான ஆய்வுகூட பாதுகாப்பு பற்றிய செயலமர்வுகள்
- □ உணவு முகாமைத்துவத்திற்கான தொழில்சார் பாதுகாப்பு பற்றிய செயலமர்வுகள்
- □ தொழில்நுட்ப ஊழியர்களுக்கான பாதுகாப்பான இரசாயன நடவடிக்கைகள் பற்றிய செயலமர்வுகள்
- □ ஆரோக்கியமான உளச் சுகாதாரத்தை பேணி வருதல் பற்றிய செயலமர்வுகள்

மேற்படி பயிற்சிகள் சாதாரணமாக ஒரு நாள், இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் நடத்தப்படுகின்றன. சில சமயங்களில் தொழில்துறைகளின் வேண்டுகோளின் பிரகாரம் இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முதலாம் மட்டத்தலான பயிற்சிகள் என்பதோடு உரிய பயிற்சிகளின் முடிவில் அவர்கள் பெற்ற பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## ■ இரண்டாம் மட்டம

தேசிய தொழில்சார் பாதுகாப்புப் பற்றிய சான்றிதழ் பாடநெறியானது பிரதானமாக இரண்டாம் மட்டத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமாக எம்மால் மேற்கொள்ளப்படுகின்றது. தொழில்சார் பாதுகாப்புத் தொடர்பான இப் பாடநெறி பயிலுநர்களுக்கு பொருத்தமாக அமைகின்றது. குறைந்த கல்வி மட்டம் காணப்படுகின்ற போதிலும் இத்துறையில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றுள்ள நபர்களுக்கு கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு இச்சான்றிதழ் பாடநெறியின் ஊடாக இயலுமை கிடைப்பதோடு எமது நிறுவனத்தில் 15 நாட்கள் பூராக கல்வியை வழங்கி இச்சான்றிதழ் பாடநெறி நடத்தப்படுகின்றது. சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் பங்கேற்கக்கூடிய வகையில் வார இறுதியில் இதனை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அத்தோடு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக இச்சான்றிதழ் பாடநெறி எம்மால் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.
15 நாட்களிலான கற்கை காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் அவர்களின் அறிவினை பரிசோதிப்பதற்கு பரீட்சையொன்று நடத்தப்படுவதோடு அதில் சித்தியடையும் நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. க.பொ.த. உயர்தர தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஆர்வம் கொண்டுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பாடநெறியை பயில்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

## ■ மூன்றாம் மட்டம்

இலங்கையில் பாதுகாப்பான வேலைத்தளங்களை உருவாக்குவதற்குத் தேவையான தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களை உருவாக்குவதன் பொருட்டு எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மூன்றாம் மட்ட பயிற்சிகள் ஏதுவாக அமைகின்றன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் டிப்ளோமா பாடநெறி இவற்றுக்கான பயிற்சிகளாக எடுத்துக்காட்ட முடியும். தற்போது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி எம்மால் நடத்தப்படுகின்றது. இதற்காகஏளு 05 ஆம் நிலை சான்றிதழை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
தொழில்துறைகளில் காணப்படுகின்ற தேவைகளை மதிப்பீடு செய்ததன் பின்னர் டிப்ளோமா பாடநெறி தயாரிக்கப்பட்டுள்ளது. இது மூன்று மொடியுள்கள் மூலம் நடத்தப்படுவதோடு அவை, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய மொடியுள், தொழில்சார் பாதுகாப்பு பற்றிய மொடியுள் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய மொடியுள் என்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மொடியுளுக்குமான அறிவு நான்கு மாதங்கள் பூராக வழங்கப்படுவதோடு ஒவ்வொரு மொடியுளின் இறுதியிலும் மொடியுள் மீதான பரீட்சை நடத்தப்படுகின்றது. அத்தோடு மூன்று மொடியுள்களின் இறுதியில் தாம் பெற்றுக் கொண்ட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயற்பாட்டு ரீதியான அறிவினைப் பயன்படுத்தி கருத்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. இறுதியில் கருத்திட்ட அறிக்கைகளுடன் ஏஜஏயு வில் தோற்ற வேண்டும் என்பதோடு பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு அதன்போது பரிசோதிக்கப்படும். பரீட்சைகளின் போதும் கருத்திட்ட அறிக்கைக்காகவும் ஏஜஏயு விற்காகவும் பெற்றுக்கொண்ட புள்ளிகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா வழங்கப்படும்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறிக்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயன்றளவு விரைவாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## ஆ. கருத்திட்டங்கள்

சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து இந்நாட்டில் பாட்டாளி மக்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றை கட்டியெழுப்பக்கூடிய வகையில் கருத்துட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை மேற்கொள்கின்றோம். வெளிநாட்டு உதவிகளை வழங்குகின்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவிகளை பாட்டாளி மக்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதனை இத்தகைய கருத்துட்டங்களின் ஊடாக நாம் மேற்கொள்கின்றோம்.

## இ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விருது வழங்கும் விழாவை ஒழுங்கு செய்தல்

பாட்டாளி மக்கள் சார்பாக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்ற கைத்தொழில்துறைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதை நாம் இதன் ஊடாக எதிர்பார்க்கின்றோம். சரியான முறையில் தமது பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் நிதமும் ஆராய்ந்து அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றுவது சம்பந்தமாக மதிப்பீடு செய்தல் மற்றும் ஏனைய கைத்தொழில் துறைகளுக்கும் அவற்றின் முன்மாதிரியை வழங்குதல் இதனூடாக இடம்பெறுகின்றது. இத்தகைய விருது வழங்கும் விழாவில் விருதுகளை பெற்றுக்கொள்ள தொழில்துறைகள் விருப்பம் கொண்டுள்ளதோடு அதனூடாக இலங்கை முழுவதிலும் பாதுகாப்பான வேலைத்தளங்களை உருவாக்குவதற்கு வாய்ப்பும் கிடைக்கின்றது. ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்த விழாவை நடத்துவதற்கான ஒழுங்குகளை நாம் மேற்கொள்கின்றோம்.

## ஈ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கினை ஒழுங்கு செய்தல்

பாட்டாளி மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு புதிய தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கும் புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் அவர்களை விழிப்பூட்டுவதற்கும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்படுகின்றது. இதன்போது வெளிநாட்டு வளப்பங்களிப்பினைப் பெற்றுக்கொண்டு அவர்கள் கொண்டுள்ள புதிய அறிவினை நமது நாட்டிற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். மேலும், இதன் போது கோட்பாட்டு ரீதியான அறிவு மட்டுமின்றி செயற்பாட்டு ரீதியான பயிற்சியினையும் பாதுகாப்பு அலுவலர்களுக்கு வழங்குவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

## உ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறைக்குரிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல்

நாளுக்கு நாள் நவீனமயமாகும் தகவல்கள் தொடர்பில் தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களை விழிப்பூட்டுவது எமது நிறுவகத்தின் ஒரு பிரதான பணி என்பதால் அது தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. ஆகவே, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் சம்பந்தமாக நாம் அறிவதோடு அதற்காக எம்மால் இயலுமான பங்களிப்பினை வழங்குவதற்கும் நாம் நிகழும் செயற்படுகின்றோம்.

## ஊ. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான தேசிய சங்கத்தைத் தாபித்தல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழிலாளர்களுக்கும் எமது மாணவர்களுக்கும் தேவையான நடவடிக்கைகளின் பொருட்டு வாய்ப்பு வழங்குவதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களுக்கான தேசிய சங்கம் தாபிக்கப்பட்டது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஆரம்ப விழா நடத்தப்பட்டு இது ஆரம்பிக்கப்பட்டது. தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு சிறப்புரிமைகளை வழங்குவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

## எ. நலநோம்பல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

பல்வேறுபட்ட குறைபாடுகள் காரணமாக தமக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை பேணிச்செல்ல முடியாத தொழிலாளர்களுக்கு நலனோம்பல் சேவைகளை வழங்குவதற்கு நாம் நிதமும் செயல்படுகின்றோம். அத்தோடு பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவதற்காக விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக எமது பங்களிப்பினை நிதமும் வழங்குகின்றோம். இலங்கையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றை நிலை நிறுத்துவதற்காக தேவையான சகல சந்தர்ப்பங்களிலும் முன்வந்து அத்தேசிய பொறுப்பினை ஏற்று செயற்படுவதற்கு நாம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம்.

## 2.1.3 சர்வதேச ஒத்துழைப்பு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சர்வதேசத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் பொறுப்புப் பார்த்துக் கொள்கின்றோம். சர்வதேச நிறுவனங்களுக்கு நிகராகவும் அவர்களுடன் இணைந்தும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பினை எமது நாட்டிற்குப் பெற்றுக்கொள்ள நாம் அயராத முயற்சியில் ஈடுபடுகின்றோம். அதன் பெறுபேறாக வெளிநாட்டு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனங்களுடன் பணியாற்றுவதற்கு எமது நிறுவனத்திற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

## 2.2 சேவை வசதிகளை மேம்படுத்துதல்

எமது நிறுவகத்தின் தரத்தினை உயர்த்துவதற்காகவும் பௌதீக வசதிகளை முன்னேற்றுவதற்காகவும் நாம் நிதமும் முயற்சிக்கின்றோம். இதன்போது நிறுவகத்தின் தரத்தினை பேணிவருவதற்காக நிறுவகத்தின் பணியிடச் சூழலை சேவையாற்றக்கூடிய வகையில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் பொறுப்பு பார்த்துக் கொள்கின்றோம்.

### 2.2.1 நிறுவகத்தின் தரத்தினை மேம்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்

எமது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உயர் மட்டத்திலான தரத்துடன் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.ஐளுழு தரச்சான்றிதழ் மற்றும்ஏளுஞ சான்றிதழ் என்பவற்றை எமது நிறுவகத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை ஏற்பட்டிருப்பது தொடர்பாக மகிழ்ச்சி அடைகின்றோம்.

### 2.2.2 நிறுவகத்தின் பௌதீக வசதிகளை முன்னேற்றுதல்

தொழிலாளர்களுக்கு விருப்பமான சூழலை புதிய பணியிடச் சூழலில் உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்கும் நாம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் பணியிடச் சூழலையும் ஓர் அழகான சூழலாக அமைப்பதற்கு முயற்சிப்பது எமது நிறுவகத்தில் உள்ள ஊழியர்களுக்கு விருப்பமான சூழலில் பணியாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கும் தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் தேவையை செயற்பாட்டு ரீதியிலேயே உறுதிப்படுத்திக் கொடுப்பதற்குமாகும்.

# மூன்றாம் அத்தியாயம

## நிறுவகத்தின் முன்னேற்றம்

# நிறுவகத்தின் முன்னேற்றம்

## 3.1 சேவை வழங்குவதன் முன்னேற்றம்

எமது நிறுவகத்தினால் நாளாந்தப் பணிகளாக மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் அளவீட்டு ஆய்வுகள் 150 ஐ 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கீழே தரப்பட்டுள்ள 3.1 அட்டவணையின் மூலம் நாம் மேற்கொண்டுள்ள சேவைகள் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| சுற்றாடல் ஆய்வுகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இரைச்சல் | **2100** |
| வெளிச்சம் | **1680** |
| வெப்பம் | **750** |
| தூசி | **1200** |
| வளி | **285** |
| வளி பற்றிய ஆய்வு | **360** |

அட்டவணை 3.1 : சுற்றாடல் அளவீட்டு ஆய்வுகளின் எண்ணிக்கை

சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சுகாதார நிலைமை உரிய முறையில் காணப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் ஐந்து நிறுவனங்களுக்காக மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டது.

## 3.1.2 விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம

சுகாதார மற்றும் பாதுகாப்பு அலுவலர்களைப் பயிற்றுவிப்பது எமது நிறுவகம் மேற்கொள்ளும் விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும். 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மட்டம் | நிகழ்ச்சித்திட்டம | காலப்பகுதி |
|---|---|---|
| முதலாம் மட்டம | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி (ஆங்கில மொழி மூலம்) | 2021 சனவரி 17 குழு 21<br>2021 மே 30 குழு 22 |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழி மூலம்) | 2021 ஆகஸ்ட் 01 குழு 01 |
| இரண்டாம் மட்டம் | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 2021 ஏப்ரல் 24 குழு 38<br>2021 மே 08 குழு 39<br>2020 ஜூலை 24 குழு 40<br>2021 செப்டெம்பர் 04 குழு 41 |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படைப் பாடநெறி | 2021 பெப்ருவரி 22 குழு 03<br>2021 மே 01 குழு 04<br>2021 டிசெம்பர் 07 குழு 05 |
| | நிறைவேற்றுத் தர அலுவலர்களுக்கான விசேட பாடநெறி | 2021 சனவரி 21 குழு 02<br>2021 மார்ச் 22 குழு 03<br>2021 யூன் 25 குழு 04<br>2021 செப்டெம்பர் 03 குழு 05 |
| | வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்களுக்கான சான்றிதழ் பாடநெறி | 2021 யூன் 28 |
| | கோவிட் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என்பது பற்றிய விழிப்பூட்டல் செயலமர்வு | 2021 மார்ச் 28 |

2021 ஆம் ஆண்டு மூன்று டிப்ளோமா பாடநெறிகள் நடத்தப்பட்டன. எமது டிப்ளோமா பாடநெறிகள் ஆங்கில மொழியில் நடத்தப்பட்டாலும் இம்முறை சிங்கள மொழியிலும் முதற் தடவையாக டிப்ளோமா பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள மொழிமூல பாடநெறிக்கு 10 மாணவர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மாணவர்களின் கோரிக்கையின் படி பதினைந்து மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். 2021 ஆம் ஆண்டு ஆங்கில மொழி மூலத்தில் இரண்டு பாடநெறிகளும் சிங்கள மொழி மூலத்தில் ஒரு பாடநெறியும் நடத்தப்பட்டன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சன்றிதழ் பாடநெறிகள் நான்கு 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்டன.

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படைப் பாடநெறிகள் மூன்று 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. அடிப்படை பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பயிற்சிகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டில் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான விசேட பாடநெறிகள் நான்கு நடத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடநெறி தொடர்பில் காணப்பட்ட விசேட கோரிக்கையின் மீது இந்த வருடத்தில் நான்கு பாட நெறிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த குழுவினருக்காக சான்றிதழ் பாடநெறி ஒன்று சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது. 56 நபர்களைக் கொண்ட குழுவொன்றிற்காக இப் பாடநெறி நடத்தப்பட்டதோடு அவர்களுடைய வர்த்தக நிலையங்களுக்குத் தேவையான உபகரணத் தொகுதிகளும் வழிகாட்டல் கையேடும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

சாதாரணமாக நடத்தப்படும் பாடநெறிகளுக்கு மேலதிகமாக னுநஉநவெ றுழசம நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டும் இந்த வருடத்தில் நடத்தப்பட்டன. வங்கிப் பணியாளர்கள் 10 பேருக்காக ஒரு நிகழ்ச்சித் திட்டமும் தாதி அலுவலர்கள் 19 பேருக்காக ஒரு நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டன.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு பற்றிய விருது வழங்கும் விழா 2021 காக விண்ணப்பம் கோரல் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பப்படிவங்கள் எமக்கு கிடைத்துள்ளதோடு அதன் ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கோவிட் தொற்று நோயின் மத்தியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு கருத்தரங்கு விழா 2021 ஐ வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. 2021.11.22 ஆம் தேதி தொழில் அமைச்சரினதும் செயலாளரினதும் தலைமையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு கருத்தரங்கு விழா 2021 நடத்தப்பட்டதோடு அன்றைய தினம் இரவு தேசிய தொழில்சார் பாதுகாப்பு டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடத்தப்பட்டது.

பணிகளின் போது இடம்பெறக்கூடிய திடீர் விபத்துக்கள் தொடர்பாக அவர்கள் முறையாக விழிப்பூட்டப்பட்டனர்.

நாட்டில் காணப்படுகின்ற தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பயிற்சி நி-கழ்ச்சித் திட்டங்கள் இணையவழி ஊடாக நடத்தப்பட்டன. இணையவழி ஊடாக பங்கேற்க முடியாத தொழில் முயற்சியாளர்களை விழிப்பூட்டுவதற்காக கோவிட் 19 சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் ஆறு செயலமர்வுகள் மீரிகம, களனி, பேருவளை, மொரட்டுவ, நீர் கொழும்பு மற்றும் புலத்சிங்கள ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டன. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கோட்பாட்டு ரீ-தியான மற்றும் செயற்பாட்டு ரீதியான விழிப்புட்டல்களை அவர்களுக்கு வழங்குவ-தற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்தது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய தொழில்சார் பாதுகாப்பு சம்மேளனம் 2021 இணையவழி ஊடாக நடத்தப்பட்டது. மூன்று நாட்கள் பூராக இச்சம்மேளனத்தை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மே-ற்கொள்ளப்பட்டதோடு தினமொன்றில் 100கும் 110கும் இடைப்பட்ட நபர்கள் கலந்-துகொண்டனர்.

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம்

அமைச்சரவையின் ஊடாக ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 2 ஆம் வாரம் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

இம்முறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம் 2021 நவம்பர் மாதம் 22 முதல் நவம்பர் மாதம் 26 ஆம் தேதி வரை நடத்தப்பட்டதோடு அது தொடர்பில் பி-ன்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கருத்தரங்கு - நவ-ம்பர் 22
2. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான டிப்ளோமா வழங்கும் விழா - நவ-ம்பர் 22
3. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா - நவ-ம்பர் 22
4. தொழில்சார் பாதுகாப்பு பற்றிய சம்மேளனம் - 2020 நவம்பர் 24 முதல் 26 வரையான மூன்று நாட்கள் பூராக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கருத்தரங்கு

இக்கருத்தரங்கு 2021 நவம்பர் மாதம் 22 ஆம் தேதி மு.ப.9.00 மணி முதல் நடத்தப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் பங்கேற்ப்பில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. கோவிட் தொற்று நோயின் மத்தியில் பணியாற்றுவது எவ்வாறு என்பதனை கருப்பொருளாகக் கொண்டு இம்முறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு கருத்தரங்கு 2021 நடத்தப்பட்டது. கோவிட் வழிகாட்டல்களுக்கு உட்பட்ட வகையில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டமையினால் அதில் 150 பேரை மட்டுமே பங்கேற்கச் செய்ய முடிந்தது. இது தொழில்சார் பாதுகாப்பு பற்றிய வெளிநாட்டு விரிவுரையாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றதோடு அவர்களின் அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றை இலங்கை கைத்தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு உருவானது.

# National OSH Conference 2022












## தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா

தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா அமைச்சின் செயலாளரது தலைமையில் 2021 நவம்பர் மாதம் 22 ஆம் தேதி பி.ப. 6.00 மணி முதல் நடத்தப்பட்டது. அதன்போது டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த 135 பேருக்கும் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்த 85 பேருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# நான்காம்
# அத்தியாயம்

## 2022ஆம் ஆண்டில் அடையப்பட்ட தனிச்சிறப்பானவெற்றிகளும் நிறுவனம் எதிர்நோக்கிய சிக்கல்களும்

# 2022 ஆம் ஆண்டில் அடையப்பட்ட தனிச்சிறப்பானவெற்றிகளும் நிறுவனம் எதிர்நோக்கிய சிக்கல்களும்

2022 ஆம் ஆண்டில் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாகஇலங்கை அரசாங்கம் அறிவித்தது. இதன் விளைவாக, எரிபொருளுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டதோடு 2022 ஆம் ஆண்டில், தொழில்துறையும் கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்தது. நாங்கள் பெரும்பாலும் தனியார் துறை கைத்தொழில்களுக்கு சேவை வழங்குகின்றோம்.

அதன்படி, எங்கள் சேவைகளைப் பெற்ற சில கட்டுமானத் தொழில்கள் மற்றும் உற்பத்தித் தொழில்கள் முற்றிலுமாக மூடப்பட வேண்டியேற்பட்டதால், தொழில்சார் பாதுகாப்புப் பயிற்சியில் பங்கேற்பது குறைவடையும் போக்கு காணப்பட்டது. இந்த நிலைமையானது சுற்றுச்சூழல் கண்காணிப்பு, பணி மதிப்பீடுகளுக்கான தகுதி மற்றும் இடர் மதிப்பீடுகள் என்பவற்றைப் பாதித்தது. அதன்படி, இது எங்கள் நிறுவனத்தையும் நேரடியாக பாதித்தது.

ஆயினும், நாங்கள் எங்கள் **“GP”** எனும் திட்டத்தை செயல்படுத்தி, அதிக வட்டி விகிதத்தில் எங்கள் வைப்புகளை மீண்டும் முதலீடு செய்தோம். இரண்டாவதாக, பரோபகார நிறுவனங்களுக்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டதோடு ஏனைய தொழில் துறைகளுக்கு தொழில்சார் பாதுகாப்பு கருத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை எங்கள் நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள தொழில்வாண்மையாளர்களுக்கு எங்கள் சேவைகளை வழங்க முடிந்தது. எம்மை அடைய முடியாதவர்களை இணையவழியில் இணைத்துக்கொண்டு பயிற்சியில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டது. இது பங்கேற்பாளர்களின் போக்குவரத்துச் செலவைக் குறைத்ததுடன், நாட்டில் ஏற்பட்டிருந்ததீர்க்கமான எரிபொருள் நெருக்கடியைச் சமாளிக்க எங்களுக்கு உதவியது. முக்கியமாக, ஊழியர்களுக்கு வீட்டில் இருந்தே வேலை செய்யும் வாய்ப்பும், எரிபொருள் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகளை தவிர்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வசதியாக வேலை செய்யத் தேவையான பொருட்கள் மற்றும் வசதிகளை நாங்கள் வழங்கினோம்.
2022 ஆம் ஆண்டில், வரலாற்றில் முதன்முறையாக, இந்த நாட்டில் தொழில்சார் பாதுகாப்புக்கான உயர் தேசிய டிப்ளோமாவை ஆரம்பித்து,**NVQ 6** சான்றிதழைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். வருட இறுதியில் 48 மில்லியன் ரூபா இலாபம் ஈட்ட முடிந்தது. இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சி நிலையில் இதனை பாரியதொரு வெற்றியாகக் கருதலாம்.

# ஐந்தாம் அத்தியாயம்

## நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம்

# நிதி நிலைமைக் கூற்று

## මූල්‍යය තත්ත්වය ප්‍රකාශය

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகை

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 6,421,557 | 2,341,266 |
| வருமதிகள் | குறிப்பு 1 | 31,265,546 | 9,278,889 |
| அபிவிருத்தி நிதியம் | குறிப்பு 2 | 202,543,847 | 171,759,456 |
| | | 240,230,950 | 183,379,611 |
| நிலையான சொத்துக்கள் | | | |
| திறைசேரி வைப்புகள் | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | குறிப்பு3 | 58,913,977 | 55,329,469 |
| மொத்த ஒதுக்கம் | | 299,144,927 | 238,709,080 |
| பொறுப்புகள் | | | |
| நடைமுறைப்பொறுப்புகள் | | | |
| செலுத்தல்கள் | குறிப்பு5 | 4,384,599 | 3,552,398 |
| மொத்தபொறுப்புகள் | | | |
| மொத்தபொறுப்புகள் | | 294,760,327 | 235,156,682 |
| மிகை வருமானம் | குறிப்பு4 | 294,760,327 | 235,156,682 |
| மொத்ததேறிய சொத்துக்கள் | | 294,760,327 | 235,156,682 |

## வருமானக் கூற்று

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
2022 டிசெம்பர 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான
வருமானக் கூற்று

| வருமானம | 2022 | 2021 |
|---|---|---|
| திறைசேரி வருமதிகள் | 6,268,890 | 6,471,700 |
| தொழிற்பாட்டு வருமானம் | 49,323,571 | 40,651,724 |
| வட்டி வருமானம் | 29,242,289 | 9,315,013 |
| தொழில்சார் பாதுகாப்பு கருத்தரங்கு | 4,945,500 | 2,852,000 |
| | 89,780,250 | 59,293,417 |
| செலவினங்களை | | |
| நிறுவன நிருவாக செலவினங்கள் | 29,948,337 | 26,288,262 |
| நிதி செலவினங்கள் | 4,646,774 | 1,784,377 |
| தேய்மானம | 7,068,521 | 6,098,545 |
| மொத்த செலவினங்களை | 41,663,632 | 34,171,184 |
| வருடத்தின் மிகை | 48,116,618 | 25,122,253 |

எனது இலக்கம் : எல்எஸ்டப்ளியூ.'.பீ.'.என்ஐஓஎஸ்எச்.'.எஸ்ஆர்.'.1.'.2022திகதி : 2023மே 31

தலைவர்
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட 3,096,741 ரூபா கிரயத்துடன்கூடிய பொறி மற்றும் உபகரணங்கள் 965,000 ரூபாவிற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு குறிப்பிட்ட மீள் மதிப்பீட்டு சொத்துக்களுக்கு உரியதாகநூற்றுக்கு 20 வீதம் வருடத்திற்கான 193,000 ரூபாவாக காணப்பட்ட தேய்மானம் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 500,000 ரூபாவிற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கணினி உபகரணங்களு-க்காக தேய்மானம் கணிப்பீடு செய்யப்படும்போது கணினி உபகரணங்களின் மீள் மதிப்பிட்டுப் பெறுமதி 50,000 ரூபாவாகக் கருதி தலா நூற்றுக்கு 20 வீதமாக 10,000 ரூபாவாக தேய்மானம் செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் மிகை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி 90,000 ரூபா அதி-கமாக காட்டப்பட்டிருந்தது.

(இ)600,000 ரூபா பெறுமதி கொண்ட மருத்துவ உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு வருடத்திற்கான தேய்மானம் கணிப்பீடு செய்யப்படும்பே-ாது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி 500,000 ரூபாவாகக் கருதி தேய்மானம் செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் மிகை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி 10,000 ரூபாவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 13,553,678 ரூபா கிரயத்துடன்கூடிய சொத்துக்கள் 9,077,000 ரூபாவிற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக கணக்காய்வின் பிரகாரம் மீள் மதி-ப்பீட்டு இலாபம் 9,039,528 ரூபாவாக காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள பங்குரிமை மாற்றக்கூற்றில் மீள் மதிப்பீட்டு இலாபம் 9,476,327 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. அதன்படி மீள் மதிப்பீட்டு இலாபம் 436,800 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(உ) சொத்துக்களுக்கான மீள் மதிப்பீட்டு அட்டவணையின் பிரகாரம் முழுமை-மயாக தேய்மானம் செய்யப்பட்ட 14,058,605 ரூபா கிரயத்துடன்கூடிய சொத்-துக்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் 9,077,000 ரூபாவிற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டதாக காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் படி குறிப்ப-ிட்ட சொத்துக்களின் கிரயம் 13,553,679 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. அதன்படி அட்டவணைக்கும் நிதிக் கூற்றுக்களுக்கும் இடையில் 504,926 ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) வரைபு கணக்காய்வு அறிக்கைக்கு பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பி-க்கப்பட்ட பதில்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள நிதிப் பாய்ச்சல் கூற்றினை ஆர-ாயும்போது பின்னரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நடப்பு வருடத்தில் பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடுகளைத் தவிர வர்-த்தக மற்றும் ஏனைய செலுத்தல்களில் கடந்த வருடத்திற்கு ஒப்பீடாக 196,675 ரூபாவிலான அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும் நிதிப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது 454,328 ரூபாவிலான குறைவு காட்டப்பட்டிருந்தது.

(ii) தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிகர நிதிப் பாய்ச்சலை கணக்கிடும்போது செம்மையாக்கங்களாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களு-க்கான மீள் மதிப்பீட்டு மிகை 436,801 ரூபாவாக குறிப்பிடப்பட வேண்டிய போ-திலும் அது நிதிப் பாய்ச்சல் கூற்றில் 399,994 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது.

(iii) வருடாந்த நிலையான வைப்புகளுக்கான வட்டி வருமதியானது 6,418,005 ரூபா என்றபோதிலும் நிதிப் பாய்ச்சல் கூற்றில் அது 4,406,623 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது.

(iv) கிடைத்த வருடாந்த மூலதன அளிப்புகள் 3,569,880 ரூபாய் என்றபோதிலும் நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் அது 6,268,890 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு கணக்கீட்டு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான கணக்கீட்டுக் கட்டணங்கள் அட்டுறு அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகையில் உரிமையாண்மை மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஆரம்ப நிலுவையின் மொத்தம் 233,597,501 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நிதி மாற்றக் கூற்றில் அது 235,156,680 ரூபாவாக காட்டப்பட்டிருந்ததால் 1,559,179 ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) நிறுவனத்தின் ஊழியர்களது சம்பளத்தில் அறவிட்டு உருவாக்கப்பட்ட ஊழியர் நலன்புரி சங்கத்தின் சந்தாப்பணம் 65,000 ரூபா செலுத்தப்பட வேண்டிய செலவுகளாக காட்டப்பட்டிருந்தது.

1.3 நிறுவகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர்எனக்குப் பெற்றுத்தரஎதிர்பார்க்கப்படும்நிறுவகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.
நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.
நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுக்குரிய எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுகொள்ளக்கூடியதாக அமைகின்றபோது அவற்றை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

நிறுவனத்தின் 2022 வருடாந்த அறிக்கையை வாசிக்கும்போது அதில் தகவல்கள் பொருண்மையான ரீதியில் தவறாக காட்டப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுமாயின்அந்த விடயங்களை சரிசெய்வதற்காக ஆளுகை தரப்பினருக்கு நான் அவற்றைறதொடர்பாடல் செய்ய வேண்டும். மேற்கொண்டும் சீராக்கப்படாத தவறுகள் இருக்கும் பட்சத்தில் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால்உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிறுவகத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிறுவகத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவகத்தின் இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு நிறுவகமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக எழக்கூடுமென்பதுடன்இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

☐ மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது கருத்துக்கான அடிப்படைகளாகும். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

☐ சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

□ பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

□ நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவகத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும்,எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது. எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்படுகின்றன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தினைத் தவிர 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன என்பது.

2.2. பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு நிறுவகம் சம்பந்தமான ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்பைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளது என்பது.

| சட்டங்கள் விதிகள்∴கட்டளைகளுக்கான தொடர்பு<br><br>2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2∴2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | அவதானிப்புகள் |
|---|---|
| (i) 10.2 பந்தி மற்றும் வழிகாட்டல் இலக்கம் 14 | நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை உரிய சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளனர் என்பது.

| சட்டங்கள் விதிகள்.˙.கட்டளைகளுக்கான தொடர்பு<br><br>2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சதர் பாதுகாப்பு மற்று | அவதானிப்புகள் |
|---|---|
| (i) 9(8) ஆம் உப பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவகத்தின் ஆளுகைச் சபை அதன் கூட்டங்களின்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறையை குறித்துரைத்து விதிகளை ஆக்க முடியுமென்ற போதிலும் அதற்கான விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 20(1) ஆம் உப பிரிவு | அமைச்சரினால் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவகத்தின் ஏதேனும் கடமையை அல்லது அவை அனைத்தையும் மேற்கொள்வதற்கான பணியின் நிமித்தமும் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு செயலாக்கத்தன்மையை வழங்கும் நடவடிக்கைக்காகவும் கட்டளைகளை ஆக்கமுடியும் என்றபோதிலும் அக்கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 11 ஆம் பிரிவு | நிறுவகத்தின் வினைத்திறன்மிகு நிர்வாகத்திற்குத் தேவையான வகையில் நிறுவகத்தின் பணிப்பாளர்களாக சில எணிக்கையிலான நபர்களை நியமிக்க வேண்டுமென்ற போதிலும் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணகாய்வுச் சட்டத்தின் 12(ஏ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதியில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் (பெறுகை) செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.
2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட, இன்னமும் பயன்பாட்டில் உள்ள 24,730,308 ரூபா கிரயத்துடன்கூடிய சொத்துக்களில் 11,176,630 ரூபா கிரயத்துடனான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு எத்தகையை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 என்பதோடு உண்மையாக உள்ள பதவியணியினர் 16 பேராக காணப்பட்டது. நிறுவகத்தின் கடமைகளையும் பணிகளையும் நெறிப்படுத்தும்போது சட்டங்களின் மூலம் ஒப்படைக்கப்படுகின்ற பணிகள் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவகத்தின் பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்படுகின்ற முகாமைத்துவ பணிகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பிரதான நிறைவேற்று அலுவலர் பதவியாகிய பணிப்பாளர் நாயகம் பதவி ஒப்பந்த அடிப்படையில் சேவை பெற்றுக்கொள்ளப்படும் நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் இருப்புக்காக முக்கியமான பணி ஒப்படைக்கப்படுகின்ற பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாடு) பதவிக்காகவும் நிரந்தர அலுவலர் ஒருவரின் சேவை தேவைப்படுகின்ற போதிலும் அவசியமேற்படும் சந்தரப்பங்களில் வளவாளர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

Ministry of
Labour and
Foreign Employment

NIOSH
National Institute of
Occupational Safety and
Health • Sri Lanka

தசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம

இலக்கம 97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05

+ 94 112 585 425

+ 94 112 585 425

info@niosh.gov.lk